
ஞாயிறு வெளியீடு     தனிப்பிரதி 0—1—3     REGD No. M. 4246

# திராவிடநாடு

மலர் 5 | 8—12—46 | இதழ் 31

## பயணம்-அங்கு



கார்த்திகை மாதமல்லவா! நமது நாட்டு பஜனைக் கோஷ்டியும் பக்தகோடிகளும் அண்ணாமலையாருக்கு அரோகரா என்று கூவிக்கொண்டு கும்பலாகச் செல்வதைப்பார்க்கிறோம்! இங்கே இது.

படத்திலே உள்ளவர்களும், பயணத்துக்குத் தயாராகத்தான் உள்ளனர்! எங்கு? ஸ்தலயாத்திரையல்ல.

தென்துருவத்தைச்சார்ந்த இடம், இன்னமும்புதிராகஇருந்துவருகிறது. அங்கேஉள்ளபூபாகம், ஒரேபனிமயம். 40லட்சம்சதுரமைல்விஸ்தீரணம் இருக்கும், சில இயல்புஎப்படிப்பட்டது, அந்த இடம் குடி இருக்கப் பயன்படுமா, என்பனபோன்றவைகள் இன்னமும் தெரியவில்லை. மனித அறிவுக்கு இன்றுவரை பிடிபடாமல் தப்பித்துக்கொண்டுள்ள இந்தப்பூபாகத்தைக் கண்டறிந்துவரக் கிளம்புகிறார்கள், படத்தில் காணப்படும் மேனாட்டு விஞ்ஞானிகள். புதிய நிலப்பரப்பைக்கண்டறிந்து, பயன்படும் அறிவைப்பரப்பக் கிளம்புகிறார்கள். ஏற்கனவே தெரிந்துள்ள 'லோகம்' போதவில்லை—அறிவுத்தாகம் அடங்கவில்லை—கருத்துக்கு எட்டிக் கண்ணுக்கு எட்டாமலுள்ள "லோகங்களை"க் கண்டுபிடிக்கக் கிளம்புகிறார்கள்.

இதுவரை உலகப்படத்திலே குறிக்கப்படாமலிருக்கிறபுதியநாடுகளைக் கண்டறிந்து, உலகுக்கு அளிக்கும்காரியம் நடைபெறுகிறது அங்கே—இங்கே நாம் கார்த்திகையில், தீப தரிசனப் பஜனையாத்திரை செய்கிறோம்!! யார் வாழ்வார்கள்! யார் ஆள்வார்கள்? நாமா!!

Best copy available.

# இன்றைய தமிழர் நிலை!

★

(புதுவைச்சிவம்)

[ஏற்ற பண் இசைக்க]

நல்ல துணையிருக்கும்—உண்மை
நாடும் அறிவிருக்கும்!
கல்வித் திறனிருக்கும்—ஆய்ந்தே
கூறும் வாயிருக்கும்!
அல்லல் தொலைப்பதற்கும்—நன்மை
ஆர்த்திடச் செய்வதற்கும்,
வல்லமை மிக்கிருக்கும்!—தெளிவோ
மனதிலிருப்பதில்லை!

நல்லறி வொன்றுரைக்கும்—அதனை
'நாத்திகம், என்னும் மதம்!
பல்பல சாத்திரமும்—தீமை
பகரும் 'நீதி' என்றே!
தொல்லைக்குக் காரணமே—'விதி'
சொல்லிடும் வைதிகமே!
எல்லையிலாதபயம் —இவற்றை
எண்ணவும் அஞ்சிடுவார்!

இந்தநிலைகொண்ட—தமிழர்
இந்நாளிருக்கின்றார்!
முந்தை உயர்வெல்லாம்—இவற்றால்
முற்றும் மறந்தொழிந்தார்!
நொந்திடும் வாழ்வடைந்தார்—துயரால்
நொறுங்கிச் சாகின்றார்!
விந்தை மிகவிளைக்கும்—மேலும்
விளம்பின் இவர் நிலையை!

சிந்தனை தோன்றவில்லை—இன்னும்
தீமை பல கண்டும்!
வந்தனை செய்கின்றான்—தம்மை
வருத்திடும் செயற்கே!
எந்த விதம் இவர்கள்—மனித
இயல்புடன் வாழ்வர்?
சொந்த மதிபெறுநாள்—அன்றே
துன்பந் தொலைந்திடு நாள்!

## அப்படியிருந்தும்!

அம்பாசமுத்திரம், மதுரை, திருவானைக்காவல், ஆகியமூன்றுஇடங்களிலும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்மாநாடு, 1936, 1937, 1939 ஆண்டுகளில் நடைபெற்றன. ஒரு மாநாட்டிலாவது, மில்களை மூடிவிடவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டதில்லை.

அப்படியிருந்தும், கைத்தறிக்காரர்களின் நன்மைக்காகவே மில்களை ஒழிப்பதாக மந்திரிமார் கூறுகின்றனர். ஒழுங்கா? நியாயமா? தகுமா?

## அன்றோர் நாள்

1922-ம் ஆண்டு, தமிழ்நாடுகாங்கிரஸ் மாநாடு, திருப்பூர், தோழர் K. S. ராமசாமிக்கவுண்டர் ஜின்னிங்பாக்டரியில் தோழர் E. வாசுதேவய்யர் தலைமையில் நடந்தது. அப்போது தோழர் டாக்டர் வரதராஜுலுநாயுடு, தீண்டாதார் ஆலயப்பிரவேச சம்பந்தமாகத் தீர்மானம்கொண்டுவந்தார். மதுரைத் தோழர் வைத்தியநாதஐயர் இதனை எதிர்த்தார்.

## மன்னிக்கமுடியாத

11-ம் பக்கத் தொடர்ச்சி

நின்று ஒப்பு நோக்கிப் பார்த்தால், உண்மையாகவே, குரைப்பவர்கள், பிதற்றுபவர்கள், வஞ்சகர், தடியர், மடையர், ஈனர், புலையர் என்ற சொற்களுக்குத் தகுதியும் உரிமையும் உடையவர்கள் "யார்" என்பது எளிதில் விளங்கிவிடும். மக்களுக்கு இன்றியமையாத வேண்டப்படும் அறத்தையும், ஒழுக்கத்தையும், அன்பையும், அறிவையும் கைம்மாறு எதுவும் கருதாது வழங்கிய சமணப் பெருமக்கள்பால் இல்லாத குற்றத்தைச் சுமத்தி, அவர்களை இழிவுபடுத்தும் நோக்கம் ஒருகால் அக்காலச் சம்பந்தருக்கும் சேக்கிழாருக்கும் இருந்து, அதைக் காரணமாக வைத்தே அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தபோதிலும், இன்றைய பகுத்தறிவுலகம் இத்தகைய பொருந்தாப் புளுகுகளை எந்தக் காரணத்திற்காகவும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

●

## திருமண விழா

நடிகமணி தோழர் D. V. நாராயணசாமி,—தோழியர் பாப்பா அம்மையார், திருமணமும் நடிகச் செல்வன் தோழர் ராஜேந்திரன்—செல்வி பங்கஜம்மாள்திருமணமும் சீரங்கத்தில், புரட்சிக்கவிஞர்பாரதிதாசன் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தைப்பற்றி அழகுற எடுத்துரைத்தார். தோழர்கள் T. P. வேதாச்சலம், E. V. K. சம்பத், C. N. அண்ணாத்துரை, ஆகியோர் வாழ்த்துரை கூறினர். பலகழகங்கள், தோழர் நாராயணசாமிக்கு வாழ்த்திதழ்கள் அளித்தன. தஞ்சை, K. R. இராமசாமியின் கிருஷ்ணநாடகசபை நடிகர்களும் மற்றும் திராவிட, காங்கிரஸ் கம்யூனிஸ்டு இயக்கங்களைச் சார்ந்த பலரும், மணமக்களுக்குப் பரிசாகப் பலபொருள்களையும், அருமையான நூற்களையும் அளித்தனர். மணமக்களின் நன்றிகூறலுடன்,மணவிழா இனிது நிறைவேறிற்று. வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும், ஏராளமான இயக்க அன்பர்களும் நடிகத்தோழர்களும்வந்திருந்தனர்.

# "தொழில் வளர்ச்சிக்குத் தடைகள்"

மதம் என்பது இந்த உலக வாழ்க்கையைப்பற்றிக்கவலைப்படுவதில்லை. அதன் கவனமெல்லாம் மறு உலகத்தைப் பற்றியதுதான். அது தான் அப்படியென்றால் தற்கால சமுதாய ஸ்தாபனங்களோ மக்களின் சமதர்மத்தை அழித்து தீங்கு விளைவிப்பனவாயிருக்கின்றன. ஜாதிப் பிரிவு முறை, பாலிய விவாகம், கூட்டுக் குடும்ப நிர்வாகவழக்கம், தர்மத் திட்டம் முதலியவை யாவும் ஜனங்களின் சமுதாய முன்னேற்றத்திற்கும் தொழில் அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையாயிருந்து வருகின்றன.

ஜாதி முறை, சமுதாயப் பிற்போக்கிற்கும், தொழில் மந்தத்திற்கும் பிரதான காரணமாயிருக்கிறது. ஜாதிக் கொள்கையில் ஒருவித கேவலமான இறுமாப்பு இருக்கிறது. அதனால் சிலர் பயனற்ற கர்வங் கொள்கிறார்கள். பலர் சிறுமையும் அதைரியமும் அடைகிறார்கள். ஆகவே இத்தகைய நிலைமையில் உழைப்புக்குள்ள உண்மை மதிப்புப்போய்விடுகிறது. அதனால் மக்கள் தொழிலைத் தேடி வேலையில் அமருவதற்கு அவசியமாகும் ஊக்கத்தை இழந்து விடுகிறார்கள். அது காரணமாக பிரதான தொழில்களில் பெரும்பாலானவை கீழ்த்தர வகுப்பார் எனப்படுவோரிடம் விடப்பட்டுப் போகின்றன. அவர்களுக்கு அத்தகைய தொழில்களை நடத்துவதற்குப் போதிய கல்வி இருப்பதில்லை. பொதுஜனங்களும் அப்படிப்பட்ட தொழில்களுக்கு ஆதரவளிப்பதில்லை. அவைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஆதலால் அநேக கைத்தொழில்கள் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலைமையில்தான் இன்னமும் இருந்து வருகின்றன. மற்றத் தேசங்களிலுள்ள அதே தொழில்கள் மிகச் சிறந்த அற்புத முறைகளில் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. பிறநாடுகளில் ரசாயனக்காரர்களும், சிற்பிகளும், வர்த்தகத் துறை விற்பன்னர்களும் தொழில்களை மேற்கொண்டு நடத்தி வருகிறார்கள். அவர்கள் நவீன விஞ்ஞான சாதனங்களாலும் அதி நூதன கலா முறைகளாலும் தொழில்களை வியக்கத்தக்க முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

இந்தியாவின் கைத்தொழில் தாழ்ச்சிக்குக் கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. விவாகத்திற்குப் பிறகும் அநேகர் தங்கள் பெற்றோர்களுடனும் கூட்டாக ஒரே குடும்பத்தில் இருந்து குடும்பப் பொதுச் செலவில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அதனால் ஏதோ நன்மை உண்டு என்றாலும், தற்கால சமுதாய நிலைமைகளில் அதன் தீமை அதிகப்படலாயிற்று. அதனால் கைத்தொழில் அபிவிருத்திற்குச் சேதம் உண்டாகிறது. கூட்டுக் குடும்பங்களில் சம்பாத்தியம் செய்கிறவர்களுக்கு பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசை மிகக் குறைந்து போகிறது. அவர்களைச் சார்ந்து காலந்தள்ளும் மற்றவர்களிடம் சோம்பலும் பிறர் சொல்வதைக் கேட்டு நடக்கும் சுதந்திரமற்ற தன்மையும் வளர்ந்து வருகின்றன. அவர்கள் எதையும் வழிகாட்டியாக முன்னின்று நடத்த விரும்புவதில்லை.

மத ஸ்தாபனங்களில் நடைபெற்று வரும் தர்ம கைங்கரிய முறைகளால் ஜனங்களில் அநேகரிடம் சோம்பல் வளருவதற்கு இடமேற்பட்டு விடுகிறது. அத்தகைய தர்ம ஸ்தாபனங்களின் சிறந்த நோக்கமும் பரோபகாரக் கொள்கையும் பெரிதும் பாராட்டத் தக்கவைதான். ஜன சமூகமும் சர்க்காரும் அத்தகைய தாம நிர்வாகங்களை ஏற்றுக்கொள்ளும் வரையில் அவைகளால் நல்ல பலனேற்படும் என்பதில் தடையில்லை. ஆனால் தற்கால தர்ம ஸ்தாபனங்கள் தப்பு வழிகளில் உபயோகிக்கப்படுகின்றன. மதத்தின் பெயரைச் சொல்லித் திடகாத்திரமுள்ளவர்கள் இலாபமடைகிறார்கள். ஜனங்களின் மூட நம்பிக்கையாலும் ஏமாந்த தன்மையாலும் சோம்பலுள்ளவர்களே நன்மையடைகிறார்கள். உண்மையில் தேவைப்பட்ட அநேகர் கவனிப்பாரற்றிருக்கிறார்கள்.

தற்காலத்தில் தொழிலின் திறமை மக்களின் மனோசக்தியைப் பொறுத்திருக்கிறது. தொழிலபிவிருத்தி மக்களின் தேர்ச்சி தந்திரம், நூதன யுக்தி ஆகியவைகளுக்கு ஏற்றவாறு சிறப்படைகிறது. பண்டைக்காலத்தில் இந்திய தொழில் துறையில் மிகப் பெரிய பெயர்பெற்றிருந்தது. அக்காலத்தில் அக்ஷர கணிதம், க்ஷேத்திர கணிதம், வானசாஸ்திரம், அனுபவ விஞ்ஞானம் முதலியவைகளின் உதவியால் இந்திய தேசத்தில் கைத்தொழில் நல்ல நிலைமையில் இருந்துவந்தது. ஆனால் தேசத்திற்குப் பற்பல துன்பங்கள் நேரிட்டுவந்தன. பகைவர் படையெடுப்புகள், எதிரிகளின் வெற்றி, அந்நியர் ஆட்சி முதலியவைகளால் இந்தியர் அறிவின் பலத்தையும் ஒழுக்கத்தின் உயர்வையும் இழக்கநேர்ந்தது. கைத்தொழில்களில் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி அநுகூலமடைவதற்கான நல்ல நிலைமை இந்தியர்களுக்கு வெகுகாலமாக இல்லையென்றே சொல்லலாம். இந்தியர்களின் தொழில் நிலை உயர்ந்த வேறெந்தத்தேசத்தோடும் வைத்து ஒத்துப்பார்க்க லாயக்கற்றதாக இருக்கிறது.

இந்தியாவின் தேவைக்கும் மூன்றில் ஒரு பாகம் குறைவாகவே ஆகாரப் பொருள் விளைகிறது. ஆதலால் இந்தியர்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை என்று விளங்குகிறது. ஆனால் ஒரு சராசரி அமெரிக்கனுக்கு வருஷம் ஒன்றுக்கு 2004-பவுண்டு நிறையுள்ள ஆகாரம் கிடைக்கிறது. தவிரவும் இந்தியர் உணவில் போஷணைசத்து மிகவும் குறைவு. இப்படிப்பட்ட வறுமை காரணங்களாலும் இந்தியக் கைத்தொழில் முன்னேற முடிவதில்லை.

பட்டினியைப் போலவே காலரா அம்மை, விஷஜுரம், எலும்புருக்கி முதலிய நோய்களும் மக்களின் தேகமனோ பலத்தைக் குறைத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே ஆரோக்கியம் திடகாத்திரம் மிகுந்த பேரறிஞர்கள் கடும்போட்டி போட்டுக்கொண்டு நிற்கும் தொழிலுலகில் உண்ண உணவின்றி பிணியாளராய் அறிவிழந்து நிற்கும் ஒரு ஜன சமூகம் அத்தொழிற் துறையில் வெற்றி பெறுமென எதிர்பார்க்க முடியுமா?

## ஒழிக தீண்டாமை

இந்திய நாட்டின் மறுமலர்ச்சிக்குப்பெரியமுட்டுக்கட்டையாக இருப்பது தீண்டாமை ஒரு காரணமாகும். மக்களை மாக்களாகக் கருதும் பழக்க வழக்கங்களில் தலைசிறந்ததாக இருப்பது தீண்டாமை என்ற தீயசெயலாகும். தீண்டாமைப்பேய், நாட்டில் நிலவுவதால்தான் இன்று பலவித மாச்சரியங்களும், பூசல்களும், குழப்பங்களும் எங்கணும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதைத் துடைத்தொழிக்கும் நாள்தான் சாந்தியும் சமாதானமும் நிலவும்நன்னாளாகும்.

நாட்டின் முற்போக்கிற்கு பெரிய இடையூறாயிருந்த இந்தச்சனியன், கடல் கடந்து வந்திருக்கும் இந்தியர்களையும் தாவிப்பிடித்திருக்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்நாட்டில் தீண்டாமையை ஒழிப்பதற்காக சில முயற்சிகள் சென்ற காலங்களில் நடந்தன. ஆனால் ஒன்றும் உருப்படியானதாக அமையவில்லை. அதன்காரணமாக தீண்டாதார்களிடையே வெறுப்பும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டதேயன்றி அவர்களுக்கு திருப்தியெதுவும் ஏற்படவில்லை. அதனால்தான் தீண்டாதார்கள் தனித்தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டுதங்கள் உரிமைகளுக்காகக் கிளர்ச்சி செய்து வந்தனர். இவர்கள் சமத்துவ உரிமை கோரி கிளர்ச்சி செய்தாலும் ஜாதி ஹிந்துக்களின் இறுமாப்பான போக்கினால் ஒருபலனும் ஏற்படவில்லை. இதற்கு முக்கியகாரணம் ஹிந்து தேவஸ்தான பரிபாலகர்கள் அந்தரங்கசுத்தியுடன்எக்காரியத்தையும் செய்யாமலிருந்ததேயாகும். இது சென்றகாலக்கதை.

இன்று உலகெங்கும் விழிப்பேற்பட்டிருப்பதுபோல் மலாயாவிலும் விழிப்பேற்பட்டிருக்கிறது. இந்தியர்கள் ஏகஸ்தாபனத்தின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றனர். சுதந்திர இலட்சியத்தைக் கட்டுக்கோப்புடன் அடையவேண்டுமென எண்ணுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இந்தியர்களைப்பிரதிநிதிக்கும்ஸ்தாபனம் சமூகத்தீமைகளை முற்றாய் ஒழித்துவிடுவதைத் தனது பிரதான கடனாகக் கொள்ளவேண்டும். சமூகப் புல்லுருவிகளைத்தடுத்து தீண்டாமையை வேரோடு கல்லியெறியவேண்டும். நாமறிந்தமட்டில் இந்த நாட்டில் ஹிந்துதேவஸ்தான அதிபர்களைச்சரிகட்டிவிட்டால் எல்லா விஷயமும் சுமூகமாய்த் தீர்ந்துவிடுமென நம்புகிறோம். வெறும்தீண்டாமையொழிப்பு என்று பேசிவிடுவதாலோ, எழுதிவிடுவதாலோ, அல்லது காகிதத்தில் தீர்மானரூபமாக அமைத்துவிடுவதாலோ, பிரமாதமான வெற்றி எதுவும் ஏற்பட்டுவிடாது. ஜாதிஆணவம்படைத்தவர்கள் முதலில் மனமாற்றங்கொள்ளவேண்டும். மனதில் கல்மிஷத்தைக்கொண்டு சீர்திருத்தம் வழங்குகிறோமென்பதெல்லாம் வெறும் பகற்கனவாகிவிடும். ஆதலால் சென்றகால அனுபவத்தைக்கொண்டு மலாயா இந்தியர் காங்கிரஸ் சரியான வழியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே எமதுதாழ்மையான அபிப்பிராயம். இன்று காங்கிரசில் ஈடுபட்டுள்ளசகலரும் அந்தரங்க சுத்தியுடன் இவ்விஷயத்தை மேற்கொள்ளுவார்களாயின் விரைவில் தேவஸ்தான அதிபர்கள்தங்கள் மனதை மாற்றிக்கொள்வார்களென்பதில் அட்டியில்லை. இந்தியர்களின் நன்மையைக் கருதி இம்முயற்சிகளை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் தனது திட்டத்தில் வெற்றி காணுவதற்குச் சகலரும் ஒத்துழைப்பார்களாக!

(ஜனநாயகம்)

## பேசவில்லை!

கான்பூரில், மொகரம்பண்டிகையின்போது, முஸ்லீம்களை, அந்த நகர இந்துக்கள்உபசரித்தார்கள்.

கெய்ரோவில், பண்டிட்நேருவும் ஜனாப்ஜின்னாவும், கைகோர்த்துக் கொண்டு நின்று, 'போட்டோ' எடுத்துக் கொண்டனர்.

* * *

வாளைவாள் கொண்டே தடுப்போம் என்கிறார் படேல். முஸ்லீம்கள் பாகிஸ்தான் பெறாமல் சும்மா அடங்கிக் கிடக்கமாட்டார்கள் என்கிறார், கஸ்னபர் அலிகான்.

* * *

கல்கத்தாவில், காங்கிரஸ், பத்திரிகைகள்மீது அடக்குமுறைப் பாணம் வீசுகிறது லீக்மந்திரிசபை என்று காங்கிரசார் கண்டிக்கின்றனர்.

பீகாரில், லீக்கை ஆதரிக்கும்பத்திரிகைகள் மீது, காங்கிரஸ் மந்திரிசபை, அடக்கு முறையை வீசுகிறது என்று, லீக்தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

* * *

பயந்தோடாதீர்கள் என்றுகாந்தியார்நவகாளி இந்துக்களுக்குஉபதேசம் செய்கிறார். விரண்டோடாதீர், என்று, பீகார்முஸ்லீம்களுக்கு லீக்கினர் உபதேசம் செய்கின்றார்கள்.

* * *

கல்கத்தா, நவகாளி சம்பவங்களை அடக்க, வைசிராய் ஏன்தலையிடவில்லை — ஏன்மத்யசர்க்கார் தலையிடவில்லை என்று காங்கிரஸ் தலைவர்கள் கேட்கின்றனர்.

பீகார் சம்பவத்தை அடக்க, வைசிராயும் மத்யசர்க்காரும் ஏன் தலையிடவில்லை என்றுலீக் தலைவர்கள் கேட்கின்றனர்.

* * *

வெள்ளையனே வெளியேபோ— இது காங்கிரஸ் முழக்கம். வெள்ளையனே, பிரித்துக்கொடுத்துவிட்டுக் கப்பலேறு—இது லீக் முழக்கம்.

* * *

பாகிஸ்தானுக்காகவே பாடுபடுவேன்—ஜின்னா கூறினார் கெய்ரோவில்.

இந்து-முஸ்லீம் என்ற பேதம் ஒன்றும் கிடையாது—இது வெறும் அரசியல் கொள்கை மோதுதல்— நேரு கூறுகிறார் இதுபோல் கெய்ரோவில்.

* * *

வேவல் ஏதும் பேசவில்லை! பேசவானேன்! கான்பூர் கனிவு, கைகோர்த்த போட்டோ, இவற்றால் விளையும் நல்ல சூழ்நிலையைக்கெடுக்கும் சம்பவமும் பேச்சும் நம்மவரிடம் கிளம்பும்போது, ஏகாதிபத்யம் ஏன் பேசப்போகிறது! சிரிக்கிறது நம்மைப்பார்த்து! சீரழிகிறது நாட்டு நிலைமை!!

## திருச்சியில் தமிழிசை விழா

திருச்சி, சிடி அமெச்சூர்சாரின் அரிய ஏற்பாட்டாக, மேற்படி கழகத் தலைவர் தோழர் N. சங்கரன், செயலாளர்கள், தோழர்கள் T. P. பொன்னுச்சாமி, மாணிக்கம் ஆகியோரின் சிறப்பான திட்டத்தின்படி, தமிழிசை மூன்றாம் ஆண்டு விழா, திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் 1-12-46லிருந்து 12-12-46 வரை நடைபெற ஏற்பாடாகி நடந்து வருகிறது. தமிழகத்தின் இசைவாணர்களின் சிறந்த ஒத்துழைப்பைப் பெற்ற இவ்விழா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் துவக்கி வைக்கப்பட்டது. தோழர் C. N. அண்ணாதுரை தலைமை வகித்தார். விழாவுக்கான விமரிசையான ஏற்பாடுகளைத் திருச்சி சிடி அமெச்சூர் சபையினர் நடத்தி வருவதுடன் 15—12—46ல், மேற்படி சபையின் ஆண்டுவிழா வைபவமாக, இழந்த காதல் நாடகத்தை திருச்சி முனிசிபல் பள்ளிக்கூடத்தில் நடத்தத்திட்டமிட்டிருக்கின்றனர். நாடகத்துக்குத் தோழர் C. N. அண்ணாத்துரை தலைமை வகிப்பார்.

திராவிட நாடு

காஞ்சி] 8—12—46 [ஞாயிறு

# கருத்து அலையா? தீர்மானமா?

★

"கிரேக்கநாட்டிலே, மக்களுக்குள் ஏற்பட்டிருந்த ஜாதிபேதம், அந்த நாட்டைக் கெடுத்தது. அறிவற்றதாலும், ஆணவம்மிகுந்ததாலும், அந்தநாட்டிலே உயர்குடிப்பிறந்தோர் என்று கருதிக்கொண்டிருந்தகூட்டம் சமுகத்தின் மற்றப் பகுதியினரை, 'மட்டரகம்' என்று கருதி, உடனிருந்து உண்ணவோ, ஒன்றாகப் பழகவோ கூட மனமின்றி, பேதம் காட்டியதால், கிரேக்க நாட்டுக்குப் பெருங்கேடு விளைந்தது."

ஆசிரியர், ஒருநிமிஷம்பிரசங்கத்தை நிறுத்தினார் குனிந்த தலைநிமிராதிருந்த ஒரு மாணவனைக் கூப்பிட்டு, "ஹலோ! பிளாக்ரூட்! இப்படிக்கவனியப்பா. முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறேன். கிரேக்க சரித்திரம்—அதிலும் அந்தச்சோபிதமான சாம்ராஜ்ய அழிவுக்கு மூலகாரணமாக இருந்ததை விளக்கிக்கொண்டிருக்கிறேன், அந்த நேரத்தில் என்னப்பா, நீ, 'மூஷிமிரா' ஏட்டிலே உள்ள எவளோ ஒரு 'பவுடர்ட்பேஸ்' ஸைப்பார்த்துக் கொண்டிருக்கிறாய்! கவனிபாடத்தை.' என்கிறார் சரித்திரப் பேராசிரியர். அவர் வகுப்பிலே எடுத்துரைத்துக் கொண்டிருந்த பிரச்னை முக்கியமானது தான், கலைமணம் கமழ, வீரம்செறிந்த நாடாகவிளங்கிய பண்டைக் கிரேக்க சாம்ராஜ்யம் அழிந்த காரணம், சரிதப் பிரச்னை, இந்நாட்டவருக்குத்தெரிய வேண்டிய பிரச்னை, சிறப்பாக மாணவர்களுக்கு முக்கியமான பிரச்னை. அப்படிப்பட்ட அரிய பாடத்தைத் திறம்படத்தான் ஆசிரியர்— சே! வெறும் ஆசிரியரா! பேராசிரியர்!!—எடுத்து விளக்குகிறார், அந்தச் சமயத்திலே மாணவத் தோழன், கண்ணாடிக் கன்னத்தைக்காட்டி அல்ல (காகிதத்திலே காணப்பட்ட) கலர் கன்னத்தைக் காட்டி உள்ளத்தைப் புண்ணாக்கிவிட்ட ஒரு A 1. சினிமாநட்சத்திரத்தைக்கண்டு ரசிக்கிறார் என்றால், ஆசிரியருக்குக் கோபம் வராமலிருக்க முடியாதல்லவா! கோபித்துக்கொண்டார். அவருக்கு அந்த 'மூஷிமிரை' மாணவரிடமிருந்து தற்காலிகமாகவாவது பறிமுதல் செய்ய வேண்டுமென்று எண்ணந்தான்—ஆனால் அதை ஒட்டி அச்சமும் ஏற்பட்டது; மாணவர் தகறார் செய்வாரேஎன்பதற்காக அல்ல—மூஷிமிரை! மாணவரிடமிருந்து பெற்றானதும், அதிலே உள்ள மூவர்ணப்படங்களின்மீது தனது நாட்டமும் பாய்ந்துவிட்டால் என்ன செய்வது என்று ஆசிரியருக்கு இலேசாக அச்சம். எனவேதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல், வேகமாகக் கிரேக்க நாட்டிலிருந்து கிளம்பி, ரோம்சாம்ராஜ்யத்துக்குச் சென்றார். சென்றவர் சொன்னார், "கிரேக்கசாம்ராஜ்யம் மட்டுமல்ல, அதைவிடப் பரந்து விரிந்து புகழ்பெற்று, ஜூலியஸ் சீசர் போன்ற மாவீரர்களைக்கண்ட, ரோம் சாம்ராஜ்யமும் பெளிபியன்—பெட்ரிஷியன் தாழ்ந்த வகுப்பு—உயர்ந்த வகுப்பு என்ற பேதத்தின் காரணமாகவே பெருங்கேடுற்றது" என்று முடித்தார். பிறகு, பொதுவாகச்சிலகூறி, "ஆகவே அரசு நிலைக்க வேண்டுமானால், ஆற்றலுள்ள படை இருந்தால் மட்டும் போதாது, கலையும் காவியமும் வளர்ந்தால் மட்டும் போதாது, வாணிபமும் வளமுற் பெருகினால் மட்டும் போதாது, சமுதாயத்திலே, பேதமும் பிளவும் இருக்கக் கூடாது, அத்தகைய பேதத்தையும் பிளவையும் போக்குவதே அறிவாளிகளின் கடமை. பாமரமக்கள், பழையகால மோகம் கொண்ட ஜனங்கள் சுலபத்திலே, தமது ஜாதி உணர்ச்சியை குலப்பெருமையை ஆச்சாராதிகளை விட்டுவிட முன்வர மாட்டார்கள். அறிஞர்கள் தான் முன்வரவேண்டும். குறிப்பாக வாலிபர்கள் இக்காரியத்தில் முனைய வேண்டும்" என்றார்.

பேராசிரியர், சரித அறிவுடன்சந்தர்ப்ப அறிவும் பெற்று, வகுப்பிலே அரிய ரசமான முறையிலே பாடம் நடத்தினது கண்டு மாணவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மகிழ்ச்சியுள்ள மாணவர்களைக் கண்டு பேராசிரியருக்குக் களிப்பு.

* * *

ஜாதிகள் இல்லையடி பாப்பா! என்ற மெல்லிய, ஆனால் இனிமையான குரலிலே, பாடிக்கொண்டே கல்லூரியைவிட்டு, "அசோக்குமார்"நடைநடந்துவந்தான் அருணகிரி. பாடல், பிரத்யேகத்தபால் முறை. வகுப்பிலே பாப்பா என்றோர் பெண். வேறு ஜாதி! எனவே பாரதியாரைத் தூதனுப்பினான் அருணகிரி. அதிலும் அன்றுபேராசிரியர், சமுகப்பிளவும் பேதமும், ஜாதிக் கொடுமையும், சாம்ராஜ்யங்களையே அழித்ததை விளக்கினாரல்லவா—அதுகேட்டு, அருணகிரிக்குப் புதுஉறுதி உற்சாகம், நம்பிக்கை. பாப்பாவும் தானே அதே பாடத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்!

பாடம் முடிந்தது—மாணவர்களின், உணவுவிடுதிக்குள் நுழைந்தான் அருணகிரி, வகுப்பிலே, எதைக் கேட்டான், வாசற்படியருகே வசீகரப் பாப்பாவை அடைய வேண்டுமென்பதற்கான புதிய உறுதியைக்கூடப் பெற்றானே அந்தப் பாடத்தால், அந்தப் பாடத்துக்கு முற்றிலும் மாறாக இருந்தது உணவு விடுதி.

பேராசிரியர், பாமர ஜனங்கள், தெளிவில்லாத காரணத்தால், ஜாதி பேதத்தைவிட மனமற்று உள்ளனர் என்றல்லவா சொன்னார். அருணா, இண்டர் வகுப்பு, கல்லூரியில். அதோ 'சிசரை' வீசிவிட்டு, சிருங்காரிலகரி பாட்டுடன், 17ம் நம்பர் அறையைத் திறக்கிறானே ஜெகத்—அவன் B. A. வகுப்பு. பனியனோடு, வெளியே உலவிக்கொண்டு, கட்டுமஸ்தான தேகத்தை மற்றவர் பார்க்கும்படி கட்டணமின்றிக்காட்சி அளிக்கிறானே கண்ணுசாமி, அவன் B. A. இப்படி அறைக்கு அறை, இண்டர். பி.ஏ.க்கள்! கல்லூரிமாணவர்கள். வகுப்பிலே வல்லரசுகள் வீழ்ச்சிக்கு முக்கியகாரணம் சமுகத்திலே இருந்த ஜாதிபேதம் என்று படித்தவர்கள்—பாமரரல்ல—பழங்காலத்தவரல்ல — பட்டப்படிப்புக்காகக்கல்லூரி புகுந்துள்ள காளைகள்.

மணி அடிக்கிறது சாப்பாட்டுக்கு. ஆறும் நம்பர் அறையிலிருந்து அனந்தன் கிளம்புகிறான், 7-ம் நம்பர் அறையிலிருந்து அருணாகிளம்புகிறான், 12-நம்பர் பத்மநாபன், இப்படிப் பலரும். ஆனால்,.......!

6, 7,ம் சேர்ந்து ஒரே உணவுக் கூடம் செல்லவில்லை. அருணா, 'அல்லாதார்' விடுதிக்குப்போனான். அனந்தன் பிராமணர் விடுதிக்குச் சென்றான்— கல்லூரி உணவுவிடுதியில்!!

காலையிலே கேட்ட பாடம், பேராசிரியரின் ஆற்றலுரை, கிரேக்க ரோம சாம்ராஜ்யச்சரிதை, எல்லாம் என்ன ஆயின! ஆறாம் நம்பர் அறையிலே இருந்த அனந்தனையும் ஏழாம் நம்பர் அறையிலே இருந்த அருணாவையும், வேறு வேறு இடத்திலே உட்காரவைத்துச் சோறிட்டனர்!! இந்த இலட்சணத்திலே அருணாவின் எண்ணம், 'பாப்பா, வேறு ஜாதியாக இருந்தால் என்ன, தன்னைக்காதலிக்கலாம் என்பது. இதற்காக இனிய குரலிலே ஜாதிகள் இல்லையடி பாப்பா! என்று பாடியும் காட்டுகிறான். சாப்பிட்டு விட்டு வெளியே வந்ததும், அனந்தனும் அருணாவும் பேசுகிறார்கள், ஆப்பிரிக்கப் பிரச்னையைப்பற்றி, விஜய இலட்சுமி அம்மையின் வீரச்சொற்பொழிவைப் பற்றி, விவேகானந்தர் போதனையைப்பற்றி, திராவிடர் கழகத்தார் கூட்டத்தில் கலகம் நடந்தது பற்றி, பலப்பல விஷயங்களைப்பற்றி. ஆனால், இருவரில் ஒருவருக்காவது, நமது எண்ணம், நாம் படிக்கும் படிப்பு, நமக்கிருக்கும் பொறுப்பு, நாடு நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் பணி, இவ்வளவுக்கும் முரணாக, கேடு செய்வதாக, கல்லூரியிலே, அறிவு பரவிய இடத்திலே ஆற்றலையும் ஆண்மையையும் பெறுவதற்கான இடமென்று குறிக்கப்பட்டுள்ள இடத்திலே, கிரீசும் ரோமும் துருக்கியும், சீனாவும், குப்தனும் குஷானும், லூதரும் லெனினும், நாவிலே நர்த்தனமாடுகிற இடத்திலே, அர்த்தமற்ற, ஆனால் ஆயாசத்தைத்தருகிற, ஆபத்தான மனப்பான்மையையும் சமூகத்திலே ஏற்படுத்துகிற, ஜாதிபேதம், நாம்சாப்பிடும் இடத்திலேயே காட்டப்படுகிறதே என்நாம் இந்தப்பேதத்தை அனுமதிக்கிறோம், இதைநீக்காமல், பாடம் படித்து என்ன பயன்? என்று எண்ணம் ஏற்பட்டதுண்டா! இல்லை! சர்வ சாதாரண சம்பவமாக அவர்கள் அதனை விட்டு விடுகிறார்கள். ஆனால் சர்வ சாதாரண சம்பவமா அது?

மதுவிலக்குப் பிரசாரத்தைத் திறம்படச்செய்தவருக்குப்பாராட்டுரை கூறிவிட்டு, ஒரு கிளாஸ் பீர் கொடுத்து, அதை அவரும், பீரா, தண்ணீரா, என்று கவனிக்காமலே குடித்தால், அது சர்வ சாதாரணமான விஷயமா?

மாணவர்கள் காலையிலே படித்தது என்ன? சாப்பிடும் இடத்திலே இருப்பது என்ன? ஒன்று அந்தப் படிப்பையாவது மாற்றி, சுக்ரநீதி, மனு தர்மம், மாந்தாதா மொழி, என்பனவற்றைப் படித்துக் கொள்ளவேண்டும். கோபம், வெட்கம், ஆத்திரம், துக்கம், அத்தனையையும், மாணவத் தோழர்கள், திரும்பிப் பார்க்காத திலகா, கனைத்தால் கோபிக்கும் கமலா, காகிதப் பந்து வீசினான் என்று கல்லூரித் தலைமைப் பேராசிரியரிடம் குறைகூறும், கோணல் வடிவு கோமதி, இப்படி இவர்கள் விஷயமாகக் கொண்டு, 'கோல்ட் பிளேக்' மீதோ, 'சிசர்' மீதோ காட்டிவிடுகிறார்களே யொழிய, தாங்கள் கற்றதற்கு நேர்மாறாகக் காட்டப்படும், இந்த உணவு விடுதிப் பேதத்தைக் கண்டு, எங்கே அவர்கள் தமது உணர்ச்சியைக் காட்டினார்கள்! இந்த இலட்சணத்துக்கு, வகுப்பிலே பாடத்தை ஒழுங்காகக் கேட்பானேன்—'மூவி மிரர்' அழகியையே பார்த்துக் கொண்டு இருந்து விடலாமே— ரசமான கனவாவது பலனாக இருக்கும்!!

எங்கே நடக்கிறது இது போல? என்று கேட்க எண்ணுகிறீர்கள். எவ்வளவோ இடங்களில்! இன்னமும் கல்லூரி உணவு விடுதிகளிலே இந்தக் கண்றாவிக் காட்சி இருக்கிறது. மாணவத் தோழர்கள், வர்க்கப் போராட்டவீரர், ஆகஸ்ட் வீரர், ஆரியவைரி, இப்படி 'விருது' பெற்ற மூன்று கட்சியைச்சேர்ந்த மாணவர்கள், அவ்வளவு பேரும், இந்த நிலையை அனுமதித்து வருகின்றனர். அவர்களின் மனப்போக்கை என்னென்பது!

என்ன செய்வது? என்று சோகத்துடன் கேட்கின்றனர் மாணவர்கள். முதலிலே ஊராருக்கு இதை எடுத்துச்சொல்வது, இரண்டாவது இதனை ஒழித்தாக வேண்டும் என்று உறுதி கொள்வது, நீன்றுவது, இந்த முறை ஒழியுமட்டும், உணவு விடுதியில் இருந்து கொண்டே உண்ணாமல் இருப்பது —முறைகளா இல்லை—திட்டமா தீட்ட முடியாது—திக்கா தெரியவில்லை!—தீர்மானம் வேண்டும் இந்தத் தீய முறையை மாய்த்தாக வேண்டும் என்று. திட்டம் பிறகு சுலபம்.

திருச்சி தேசீயக் கல்லூரியிலுள்ள பேத முறையைப் போக்க, அங்குள்ள மாணவர்கள், எக்கட்சியினராயினும் ஒன்று சேர்ந்து, கிளர்ச்சி செய்ய எண்ணுவதாகக் கேள்வி—மகிழ்ச்சி — பாராட்டுதலுங்கூட இப்போதே! இந்தக் கிளர்ச்சிக்குப் பார்ப்பன மாணவர்களும் ஆதரவு தருவதாக அறிந்து அகமிக மகிழ்கிறோம். ஆனால் மகிழ்ச்சி மறுகணமே மங்குகிறது—பயம் ஏற்படுகிறது—மாணவர்கள், 'மன அலை'யைக் காட்டினார்களோ என்று—அவர்கள் தீர்மானமாக, ஜாதி முறையில் உள்ள சாப்பாட்டு விடுதித் திட்டத்தை ஒழிப்பது என்று முடிவு செய்து காரிய மாற்றக் கிளம்பாமல், வெறும் மன அலையை மட்டும் வெளியே காட்டிவிட்டு, மறுபடியும், 'பழையபடி'' ஆறாம் நம்பர் அனந்தன் வேறு இடத்திலும், ஏழாம் நம்பர் அருணா மற்றோர் இடத்திலும் சாப்பிடுவதற்குக் கிளம்பி விடுகிறார்களோ, என்னவோ, என்று பயப்படுகிறோம்.

இந்தப்பயத்தைப்போக்கி, ஜெய வீரர்களாக அம்மாணவ மணிகள் விளங்குவார்களா! காரிய மாற்றும் காளைகளா, அல்லது கருத்தலையைக் காட்டிவிட்டு, கண்ணயரும் போக்கினரா? நாமறியோம் பராபரமே! நாடு அறியச் செய்யட்டும் அந்த மாணவ நண்பர்கள்.

## எல்லையில்!

ஆப்கனிஸ்தானத்துக்கும், சோவியத் ரஷியாவுக்கும், எல்லை சம்பந்தமாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, இருநாட்டு ஆட்சி உறுப்பினர்களும், ஒப்பந்த ஏட்டிலே கையொப்பமிட்டனர். ஆப்கனிஸ்தானம் இந்திய பூபாகத்தின் அண்டைவீடு. அங்கு சோவியத் ரஷியாவுக்குச் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது.

லெப்டினன்டு ஜெனரல்

# சர். சி. பி. இராமசாமி ஐயருக்கு

## 190 திருவாங்கூர் துர்ப்பாக்கியர்கள் அளிக்கும்

# பிரிவுபசாரப் பத்திரம்

திருவிதாங்கூர் திவான் சாகேப்!
பிரம்மகுல ரட்சகரே
பெருங்கண்ணரே
ஏகாதிபத்யத்தின் செல்லப்பிள்ளையே
அக்ரகாரமாக்கிய தீரரே
'அமெரிக்கன் மாடல்' கர்த்தாவே
அன்னையின் புகழையும் தனயனின்
தீரத்தையும் தெரிவிக்கும் ஒலிபரப்பியே
மயிலை வாசியின் விசுவாசியே-
பொது உடைமைக்காரரைப் பொசுக்கிடக்கிளம்பிய புலியே!

ஆலயமும் அரண்மனையும், ஆரியருக்குப் பதுங்குமிடம் என்று, திராவிடர் கழகத்தார் கூறுவார்கள். அவை அர்த்தமற்ற வார்த்தைகள் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம்—தாங்கள் திருவிதாங்கூருக்குத் திவான் ஜீயாக வருகிறவரையில், வந்தபிறகே கண்டோம், அந்தக்கட்சியினர் கூறிய மொழி உண்மை என்பதை.

பிரம்மகுல ரட்சகா! இந்த நாட்டிலே, காந்தியாரிடம் செல்வாக்குப் பெற்றவர்கள் சிலர் உண்டு, சிலருக்குச் சர்க்காரிடம் இருக்கும்; இருஇடத்திலும் ஏககாலத்திலே செல்வாக்கு பெறுபவர்கள் கிடையாது. ஆரிய! உமக்குத் தான் அது முடிந்தது. உம்மை, விலிங்டன் வைசிராயின் ஸ்வீகாரம் என்பார்கள்! அதுபோலத்தான் இருந்தது செல்வாக்கு. அதேபோது காங்கிரசிலும் உமக்குச் செல்வாக்குத்தான். எங்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. எப்படி நமது திவான் ஜீயால், டில்லி, வார்தா, ஆகிய இருபீடங்களிலும் மாலை மரியாதைபெற முடிகிறது, என்று ஆச்சரியப்பட்டோம். திராவிடர் கழகத்தார் விளக்கினர் அந்த இரகசியத்தை. சர்வம்பிரம்மமயம்ஜகத்!—டில்லியிலும் அது தான்—வார்தாவிலும் அதேதான் என்றார்கள். உண்மையாகத்தான் இருக்கிறது. நீர் ஓர் ஆரியர்என்ற காரணத்தாலே தான் உமக்கு இருஇடத்திலும் செல்வாக்கு கிடைத்தது.

'காந்தியாரே! திருவாங்கூர் வராதீர்! வந்தால் கைதுசெய்வேன்!" என்று முன்பு 'கபர்தார்' கூறினீர். நாங்களெல்லாம், அப்படிப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே நடுநடுங்குகிறது நமது மகாத்மாவிடம், இந்தப் பஞ்சாங்கக்காரப்பிருமணரின் மிரட்டலுக்கா, காந்திமகான் பயப்படுவார் என்று எண்ணினோம், இதோ வருவார், நாளைவருவார், வந்ததும், இந்த சர். சி. பி, மயிலைநோக்கிஓட வேண்டும் பார் என்றெல்லாம் மனப்பால் குடித்தோம். ஆனல், உம்முடைய அறிக்கை வந்தபிறகு, காந்தியார் திருவாங்கூர் வரவில்லை. ஏகாதிபத்யத்தாக்குதலுக்குஅஞ்சாத காந்தியார், பிருமண கோபத்துக்கு அவ்வளவுபயந்தார்.

அவர்மட்டுமல்லவே! அவருடைய 'வாரிசு'—சர்வதேசிய நோக்குடைய, சண்டமாருதப் பிரசங்கப் பண்டிதஜவஹர், திருவாங்கூர் காங்கிரஸ்—திருவாங்கூர் கம்யூனிஸ்டு கட்சி—தொழிலாளர் ஸ்தாபனங்கள்—ஆகியவைகள் உமது தாக்குதலால் இம்சைக்காளானபோது வாய்திறக்கவில்லையே—திருவாங்கூர் பக்கமே வரவில்லையே!

நேற்று காஷ்மீர் ராஜாவை மிரட்டினர்—திருவாங்கூரில் கீர்பகிரங்கமாக லெப்டினன்டு ஜெனரல்பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, இராணுவ ஆட்சியே நடத்திக் காட்டினீர்—பண்டிதர் ஒரு வார்த்தை பேசவில்லையே!! பேசமுடியவில்லையே!

மயிலை வாசிகளைத் திருவாங்கூருக்குக் கும்பல் கும்பலாக, ஜட்ஜுகளாகவும் சங்கீதவித்வான்களாகவும், அதிகாரிகளாகவும், வியாபாரிகளாகவும், குடிவரச்செய்து, சமஸ்தானத்தை, சதுர்வேதி மங்கலமாக்கினீர். யாரால் தடுக்கமுடிந்தது? கொச்சிக்குக் கோவை சண்முகம் திவானவதா, இந்தக் கொடுமையைக்கண்டும் நாட்டுமக்கள் சும்மா இருக்கின்றனரே என்று எழுதிய 'இந்து' உம்முடைய பிரவேசத்துக்கு, பாராட்டியதோடு இல்லையே, பழனிமுருகனைப் பஜித்துக்கொண்டிருந்த பக்தரை, பிரதமநீதிபதியாக்கி, சமஸ்தானத்துக்குக் கொண்டுவந்தீர்—அவர் ஆரியர் உமது இனம்— மயிலை—இந்து பாராட்டித்தான் எழுதிற்று.

அடக்குமுறை—பத்திரிகை ஜாமீன்—எடுத்ததெற்கெல்லாம் 144-ஊர்வலம் நடத்தாதே—பொதுக்கூட்டம் போடாதே—வேலைநிறுத்தம் செய்யாதே—முழக்கம் செய்யாதே—என்று, திவானாகவந்தநாள் தொட்டு அமுல் நடத்தித்தான் வந்தீர். இவ்வளவும், "அக்ரமம்—அநீதி,கொடுங்கோன்மை—" என்று கண்டிக்கப்பட்டு, இவைகளுக்குக் காரணமாக இருப்பவரின் பெயர்நாறிப் போயிருக்கும் வேறு இடத்திலே—அல்லது திருவாங்கூரிலேயே ஆரியரல்லாதார் யாரேனும் திவானாக இருந்திருந்தாலும், கண்டனம் பிறந்திருக்கும்—பொதுமக்களின் கோபப்பார்வையிலே! அந்த அமுல் பொசுங்கிப் போயிருக்கும். உமக்கு அப்படி ஏதும் இல்லை. ஜாம் ஜாமென இங்கு அடக்குமுறையை வீசுவீர்—அல்லோலகல்லோலமாகும் சமஸ்தானம்—அடுத்த வாரத்திலேயே, சென்னைப்பத்திரிகைகள் சகலமும், சச்சிவோத்தமர் சர். சி. பி. இராமசாமிஐயரின் படத்தை சர். சிவசாமிஐயர் திறந்துவைத்தார்; சர் அல்லாடிகிருட்டிணசாமி ஐயர் தலைமை வகித்தார்; அரியக்குடி ராமானுஜமய்யங்கார் பாடினார்; அலமேலு ஜெயராமய்யரும் பிரசன்னமாகி இருந்தார்கள் என்று அல்லவா எழுதும்! உமது அமுலினால் இங்கே எமது மக்கள் பட்ட தடியடியால் ஏற்பட்ட தழும்பின் கனத்தை நாங்கள் கண்டு கலங்கிக் கொண்டிருப்போம், அந்தச்சமயத்திலே, உமது அகன்ற, நீண்ட, ஆழத்தையும் கூர்மையையும் விளக்குகின்ற பெருங்கண்ணின் பேரொளியைப் பற்றியல்லவா, சென்னைப்பத்திரிகைகள் புகழ்ந்து புகழ்ந்து எழுதிக்கொண்டிருக்கும்.

திருவிதாங்கூர் சட்ட மறுப்பின்போது, தலைவர்கள் தொண்டர்கள் மட்டுமா, கல்லூரி மாணவர்கள், மாணவிகளையும், தண்டித்தீர்—அந்தக் கொடுமையை, "மக்களின் மடமை" என்றல்லவா அந்தப் பத்திரிகைகள் எழுதின.

பட்டாளத்தார் பவனி வந்து உமக்கு "ஜே" போட்டனர்—மக்கள் சபித்தனர். அப்போதும், உமது புகழைப் பரப்பவே, பத்திரிகைகள் பாடுபட்டன.

சமஸ்தானத்துக்குள்ளே உள்ள பத்திரிகைகள் அடக்குமுறையால் வாய் மூடிக் கிடந்தன. சென்னைப் பத்திரிகைகளோ, இன பாசத்தால், உமது கடுமையான நடவடிக்கைகளைக் கடுகு எழுத்திலும், உமது புன்சிரிப்பு—உமக்கு அன்னையின் ஆதரவும் தனயனின் தயவும் கிடைத்ததன் காரணம்—உமது பெருங் கண்ணிலேயிருந்து சொட்டும் கலை ரசம் இவைகளைப் பற்றியல்லவா புகழ்ந்து எழுதிக் கொண்டிருந்தன.

சமஸ்தானக் காங்கிரசின் கிளர்ச்சியை அடக்க, எவ்வளவு கொடுமையான முறைகளைக் கையாண்டீர். துப்பாக்கிப் பிரயோகம் செய்யச்செய்தீர். நெய்யாற்றங் கரையருகே, குண்டடிபட்ட மக்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்விட்டவர் யார்? ஆலப்புழை, கோட்டயம், முதலிய பகுதிகளிலே 'வேட்டு' மூலம், உமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டீர். யார், இந்தக் கொடுமையைக் கண்டித்தனர்.

அகில இந்தியக் காங்கிரசும் உம்மை அசைக்கவில்லை, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் உம்மை வாரி அணைத்துக் கொண்டது.

மக்களின் மனதிலே திகில் எழச் செய்தீர்—மயிலை வாசிகளின் மனதிலே மகிழ்ச்சி பெறும்படியாக, உத்யோகங்களை வாரி வழங்கினீர்.

பட்டம்தானுப் பிள்ளை,
பெரோரா
P. நாணு
பூதலிங்கம் பிள்ளை
C. கேசவன்
சங்குப் பிள்ளை,
பத்மனாப பிள்ளை

கே. பி. நீலகண்டம் பிள்ளை

பரமேஸ்வரன் பிள்ளை

பூதலிங்கம் பிள்ளை

ஜோசப்

மாத்யூ

இப்படிப் பல தலைவர்கள், உம்முடைய ஆட்சியிலே பட்ட அல்லல் சொல்லுந்தரத்ததல்ல. இவ்வளவு கொடுமைகளிலே, ஆயிரத்தில் ஒருபாகம், வேறு எங்காவது, சமஸ்தானத்திலோ, பிரிட்டிஷ் பிரதேசத்திலோ நடந்திருந்தால், எவ்வளவு கண்டனம் கிளம்பி இருக்கும். பதவி நிலைத்திருக்குமா?

ஜாலியன்வாலா நடக்கிறதே! டயர் ஆட்சி நடக்கிறதே! என்று காந்தியார் கூறிப் பார்த்தார், மகாகனம் சீனுவாச சாஸ்திரியாரைக் கூப்பிட்டாவது நாட்டிலே சமாதானம் உண்டாக்கச் செய்யக்கூடாதா என்று கெஞ்சினர். பணிந்தீரா? இல்லை! பணியாத உம்மீது காந்தியாரின் "இராணுவம்" பாய்ந்ததா? இல்லை.

எவ்வளவு ஆணவமான பதிலறிக்கை விடுத்தீர் காந்தியாருக்கு! முதல்தரமான ஏகாதிபத்ய ஏஜண்டின் பாஷையில் பேசினீர். வெளியூராருக்குஇங்கு என்ன வேலை என்று கேட்டீர். எவ்வளவு பெரிய மனிதரானாலும் காந்தியாருக்கு இங்கேஎன்ன வேலை? என்று கேட்டீர். யார் உம்மை என்ன செய்தார்கள்?

இதெல்லாம் கொஞ்சம் பழங் கதை.

நேற்று நடந்ததே, பொதுஉடைமைக்காரர்களை வேட்டையாடிய படலம். ராணுவத்தைக் கிராமங்களுக்கு அனுப்பினீர். சுட்டனர். லெப்டினன்டு ஜனரல் ஆனீர். சமஸ்தான மெங்கும் அமளி. நாட் கணக்கிலே, 'போர்முகாம்'போன்ற நிலைமை இருந்தது. சமஸ்தானமெங்கும் பீதி. அடக்கியே தீருவேன் என்றீர். பிணத்தைக்கண்டு பயப்படவில்லை! இரத்தக்கரை படிந்த கையைக் காட்டி, "நான் யார் தெரியுமா?" என்றீர், பலர் இறந்துபட்டனர். 'கப் சிப்' என்று தான் நாடு இருக்கிறது. பத்திரிகைகள், ஸ்மட்சைத்திட்டின, உம்மை வழக்கப்படி பாராட்டின. ஏழை திருவாங்கூர் பாட்டாளிகளின் பிணத்தைக்கண்டு பரிதாபப்படவில்லை. நிதானமாகக் கணக்கெடுத்து, 190 பேர்தான் இறந்தார்கள்—என்று, காலின்கீழ் சிக்கி நசுக்குண்ட புழுவைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதுபோல, கையால் அடித்துக்கொன்ற கொசு'வைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதுபோல, சமஸ்தான மக்களைக் கொன்று குவித்துவிட்டு, சர்வசாதாரணமாகப் பேசுகிறீர். சுதந்திரம், விடுதலை, ஏகாதிபத்ய ஒழிப்பு அடக்கு முறை ஒழிப்பு, என்பவைகளே தமது மூச்சு என்று கூறிப் பெருமை கொள்ளும், ஏடுகள், ஒரு கண்டனமும் தெரிவிக்கவில்லை.

வெளியே இருந்து வந்தீர், வெளியாரைக்கொண்டுவந்து திணித்தீர், வெள்ளைக்கார ஏகாதிபத்யத்துக்கு ஏஜண்டானீர், காங்கிரசைக் கருவறுத்தீர், காந்தியாரை 'நில்' என்று தடுத்தீர், மாணவர்களை அடக்கினீர், பத்திரிகை பேச்சு, கூட்ட, சுதந்திரங்களைப் பறித்தீர், தடியடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தீர், பாட்டாளிகளின் குலை அறுபட குண்டு வீச்சும் செய்தீர், பிணத்தின்மத்தியிலே நீர் நிற்கும்போதும், புகழ் மாலையே சூட்டின பத்திரிகைகள்! ஏன்? அதுதான் திராவிடர் கழகத்தார் சொல்வார்களே சூட்சமம்—சர்வம் பிரம்ம மயம் ஜெகத்.

யார் செய்த "பூஜாபலனோ", இப்போது, வேலையைராஜிநாமாச் செய்துவிட்டீர் என்று அறிக்கை வெளிவந்திருக்கிறது. பட்ட கஷ்ட மத்தனையையும், மறந்துவிடும் அளவுக்கு மகிழ்ச்சி அடைந்தோம். மகானுபாவா! நீ நீடூழி காலம் வாழ்ந்து கொண்டு, இன்னும் மேலான பதவிகளெல்லாம் அனுபவி, இன்னும் எந்த ராஜா குடும்பத்தின் தயவாவது கிடைத்தால், ரசமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிரு, மயிலையில் மிச்சம் மீதியுள்ள வேலையில்லா வக்கீல், சாரீரம் போன வித்வான், கடன்பட்டகனபாடி, கிடைத்தால் அங்கே கொண்டு போய்க் குடி ஏற்றும், எதாவது செய்யும், எம்மை விட்டாயே, அதுபோதும் மகாப்பிரபோ! இடிந்த வீடு, உடைந்த பாலம், புண்ணான தழும்பு, அறுந்த தாலி, இவைகளை எமக்குஅளித்த உத்தமரே, நீர் எமது சமஸ்தானத்தை விட்டு விலகுவது கேட்டு, நாங்கள் அடைந்த ஆனந்தத்தைஇந்தப் பிரிவு உபசாரப் பத்திரத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். போ! திவானுகி தீயன யாவும் நாங்கள்பெறுமாறு செய்த ஆரிய குல திலகனே! எம்மை விட்டுப்போ!

கொஞ்சம் எங்கட்கு வாழ்வு, சுதந்திரம், சுகம்ஏற்படட்டும்! எம்மைப் பிடித்தாட்டிய பிரம்ம குலத்தவனே! பட்டது போதும், விட்டுவிட்டுப் போவது கேட்டு, மகிழ்கிறோம், விலகிற்று விபத்து, ஒழிந்தது அடக்கு முறை, அழிந்தது ஆணவம் என்று.

இப்படிக்கு,

**தங்கள் ராணுவத்தால் குண்டடிபட்டு இறந்த 190. துர்ப்பாக்கியர்கள்.**

## ஆளும் திட்டம்!

—

அகில உலகிலும் வியாபார ஆதிக்கத்தைப் பரப்பி, ஆடையை மலை மலையாக இங்கு அனுப்பி, பரந்த இந்திய பூபாகத்தைச் சுறண்டுமளவுக்கு, தொழில் துறையில், குறிப்பாக ஆலைத்தொழிலில் அபிவிருத்தி அடைந்திருக்கும், பிரிட்டன், இப்போது வெளிஉலகில், அமெரிக்க, ஜப்பான். ஆகிய போட்டிகளைச் சமாளிக்கவேண்டி இருப்பதை எண்ணி, ஏற்கனவே அடைந்திருக்கிற முன்னேற்றத்தை மேலும் திருத்திப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திரிசபையிலே, வியாபார போர்டு தலைவராக உள்ள சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பிரிட்டிஷ் ஆலைத்தொழிலை அபிவிருத்தி செய்ய ஒரு ஐந்தாண்டுத்திட்டம் தயாரித்திருக்கிறார். முன்னேற்றமடைந்துள்ள பிரிட்டன், ஆலைத்தொழிலை மேலும் முன்னேற்றமடையச் செய்கிறது. ஆலைத்தொழிலில்,முன்னேறவேண்டிய, முன்னேற்றமடைவதற்குச் சகலவசதியும் உடைய இந்து, நமக்கென்று வாய்த்திருக்கும் முதலமைச்சர், இருக்கும் மில்லையும் மூடவேண்டும், புதிய மில் போடக் கூடாது என்கிறார். சர். கிரிப்ஸ், ஆளும் திட்டம் தயாரிக்கிறார். நம் பிரகாசம்,...........!!

## வரப் பெற்றோம்

—

"யார்க்கும் அன்பர் சீதக்காதி" என்ற வரலாற்று நூல், காயல் பட்டணம் M. முகம்மது ஹசன் அவர்களால் இயற்றப்பட்டது. இந்நூல், சிறப்பாக முஸ்லீம் சகோதரர்களாலும் பொதுவாக அனைவராலும் வரவேற்கக்கூடிய முறையில், அன்பர் சீதக்காதி அவர்கள் பொது மக்களிடையே மிகவும் தாராளமாகப் பழகி, ஏழைகளின் இன்னலைப் போக்கிய பெருங்குணம் படைத்தவர் என்பது ஆதாரங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா [illegible]ந்து.

கிடைக்குமிடம் :—

ஹஸன் ஸ்டோர்ஸ்,

காயல் பட்டணம்.


# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி


## அறிக்கை.

—

அபரிமிதமான மழையினால், சேலம் ஜில்லா தர்மபுரியைச் சேர்ந்த அன்னசாகரம் ஏரியின் கரை உடைந்து பெருகிய வெள்ளத்தின் சேதத்தினால் 400 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் பரிதபித்து நிற்கின்றன. அநேகம் வீடுகள் இடிந்தும், தகர்ந்தும் சேதமாயின. 250 கைத்தறிகளை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. நிவாரண வேலை நடந்து வருகிறது. கவர்ன்மெண்டார் ஷை வேலையினிமித்தம் ஒதுக்கி வைத்துள்ள உபயத் தொகையை அதிகரிக்கும்படி வேண்டுகிறேன். எல்லா பொது ஜனங்களும் முக்கியமாய் நெசவாளர்களும் கருணை கூர்ந்து மேலே சொன்ன ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கி நிற்கும் ஏழைச் சகோதரரைக் கைதூக்கிவிட்டு ஆதரிக்கும்படி தங்களாலியன்றவரை பொருளுதவி செய்ய முன்வர வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

G. Samuel.

உபதலைவர், தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனம்.

2—12—46 சேலம்.

—

## நூல் பங்கீடு முறையும் கைத்தறி ஜவுளி கட்டுப்பாடும்

—

*சென்னை மாகாண சர்க்கார் கைத்தறி ஜவுளி கட்டுப்பாடும் நூல் பங்கீடு முறையையும் புதிய ஏற்பாடுகள் செய்யப்போவதாய் தெரிவதால் கீழ்க் கண்ட விஷயங்களை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தால் நலமாய் இருக்கும்.*

ஏழைகள் வாங்கும் துணிகளுக்குத் தான் கட்டுப்பாடு அவஸ்யம் என்பதைச் சர்க்கார் கவனித்து 40 நெ. நூலுக்கு கீழ்ப்பட்ட நெம்பர் நூலில் தயாராகும் வேஷ்டி - புடவை (40 இஞ்சு அகலத்துக்கு மேற்பட்ட) தறிகளைக் கூட்டுறவுச்சங்கம் மூலம் சேர்த்துக்கொண்டு ஏழை மக்களுக்குத் தேவையான ரகங்களை உற்பத்தி செய்து விலை நிர்ணயித்து விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட நெம்பர் நூலில் கைத்தறியில் தயாராகும் ஜவுளிகளை இப்பொழுது மாகாணத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்து வருவதை நிறுத்த வேண்டும். கைத்தறி ஷர்டிங்கு கோட்டிங் இவைகளுக்கு நூல் பங்கீடு அதிகம் போகாமல் கட்டுப்படுத்த வேண்டும்.

40 நெம்பர் அதற்குமேற்பட்ட நூல்களில் தயாராகும் கைத்தறி ஜவுளிகள் பெரும்பாலும் வேலைப்பாடு உள்ளதாகவும் பொருளாதாரமுள்ளவர்கள் வாங்கி உபயோகிக்கக்கூடியனவாயுமிருப்பதால் அதில் கட்டுப்பாடு தேவையில்லை. உயர்ந்த நெம்பர் நூலில் தயாரான கைத்தறிஜவுளிகள் ஏராளமாக வியாபாரிகளிடம் கைவசம் தங்கி இருக்கின்றது.

1939ம் வருஷத்திலும் அதற்கு முந்தியும் நெசவாளர்கள் என்ன தாம் செய்தார்களென்பதைப் பரிசோதித்து பட்டு நெசவு நெய்த நெசவாளர்களாய் இருந்தால் அவர்களை நூல் பங்கீடு கார்டிலிருந்து விலக்கு ஏற்படுத்தலாம். சர்க்கார் பட்டு ஜவுளி கட்டுப்பாடு எடுத்த பிறகு பட்டு விலை குறைந்து 30 நாள் வேலைக்கு ஏராளமாக பட்டு கிடைத்தும் பட்டு நெசவு நெய்ய நெசவாளர்கள் கிடைப்பதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அ. க. தங்கவேல்,

காஞ்சீபுரம்,

5—12—46.

# மன்னிக்க முடியாத குற்றம்

(நக்கீரன்)

பாண்டியனுடைய வெப்பு நோயைப் போக்குவதற்காக வந்த சம்பந்தரைக்கண்ட சமணர்கள், மனம் வெகுண்டு, தங்கள் நூல்களில் உள்ளனவற்றை எடுத்துச் சொல்லிக் குரைத்தார்கள் என்றும் அதுகண்ட சம்பந்தர் மிகவும் அமைதியாக, அவர்களைப் பார்த்து, 'பொருள்கள் நிலையை முறைப்படி பேசுங்கள்' என்று சொன்னதாகவும், அப்போது சமணர்கள், வடவைபோல்சீறி, வாயில் வந்ததைப் பிதற்றினார்கள் என்றும், சமணர்களின் இச்செயலைக் கண்டஞ்சிய மங்கையர்க்கரசியாரின் குறிப்பறிந்த சம்பந்தர், அம்மையாரை நோக்கி 'இந்த ஈனர்களைக்கண்டு நான் அஞ்சமாட்டேன்' என்று கூறியதாகவும் பேசப்படும் நிகழ்ச்சி, பெரியபுராணத்தில் சேக்கிழாரால் பாடப்பட்டுள்ளது.

"செந்தண்மை பூண்ட சேக்கிழார், செந்தமிழாம் இனிய தமிழாலன்றோ பெரியபுராணத்தைப்பாடியுள்ளார்! அழகுதமிழில் அமைந்து—அடியார்தம் அன்புடைமையை அளப்பரும் அறிவாற்றலின் துணைகொண்டு–தூய்மைக்கு இருப்பிடமாக வைத்து எழுதப்பட்ட இப்புராணத்தையன்றோ சிலர் குறைகூறுகின்றனர்! இவர்தம் அறியாமையை என்னென்பது!" என்பதாகச் சில 'சைவமெய்யன்பர்கள்' கூறுவதை நான் பலதடவைகேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் நான், குற்றமற்ற ஒன்றைக்குற்றமுள்ளதாகக் கூறுபவர்கள் குறைமதி படைத்தவரே என்றும் எண்ணியதுண்டு. ஆனால், குற்றமற்றதாகப் பேசப்படும் ஒன்றை, அது குற்றமுள்ளது என்றுகண்டு, அதனைக்குறைகூறுபவர்கள், ஏன் அச்செயலை மேற்கொண்டனர்? அவர்கள் அதனிடத்துக் கண்டகுறை யாது? என்பன போன்றவைகளை எண்ணிப்பாராது, குறைகூறுபவர்கள் மீது குதித்துப்பாய்ந்து விழுவது முறையா என்று, மக்களுக்கு இயல்பாகவே உள்ள பகுத்தறிவு என்னைத் தூண்டிற்று. பொதுவாகவே, பகுத்தறிவு, மக்களாய்ப் பிறந்தார் அனைவர்க்குமே இருக்கிறது என்றபோதிலும், பெரும்பாலார் அதன்வழி செல்ல இசைவதில்லை. ஒன்றைப் பகுத்தறிவது—பகுத்தறிந்த ஒன்றில் இருக்கும் பொய்மெய்களைக்கண்டு தெளிவு பெறுவது—தெளிவு பெற்ற அவ்வழி நிற்பது என்பன போன்றவைகளைக் கடைப்பிடிப்பது பிழைபாடுடைய செயல் என்று நம்மவரிற் பலர் கருதிவிடுகின்றனர். அதிலும், கடவுள்—மதம் — புராணம் ஆகியவைகுறித்துத், தங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தி அவற்றிலுள்ள குணம்–குறைகளைக்கண்டு தெளிவு பெறுவதும், பெற்ற தெளிவின்படி நடந்துகொள்வதும் "பெரியபாபம்" என்று கருதும்படி கட்டாயப்படுத்தப்பட்டு விடுகின்றனர். கடவுள்–மதம்–புராணம் ஆகியவைகுறித்து ஐயப்பாடு கொள்வதும், அவ்வையப்பாடுகளை நீக்கிக் கொள்ள முயல்வதும் முறையற்ற செயல்கள் என்று, அவைதம்மை உண்டாக்கிய முன்னோர்கள், தங்கள் அறியாமை அம்பலத்துக்கு வந்துவிடுமே என்று அஞ்சியும், தங்கள் பிழைப்பில் மண்விழுந்து விடுமே என்றுகருதியும் முன்னெச்சரிக்கையாகவே இவ்வாறு எழுதிவைத்து விட்டனர். இதனால் இவர்தம் இக்கோட்பாடு, மக்கள், தங்கள்,பகுத்தறிவைப் பயன்படுத்திப் பார்க்கும் இயல்பைப் பெறும் காலம் வரை நிலைத்திருக்கவும் முடிந்தது. ஒரு காலம் இருந்தது, மக்களுக்குப் பகுத்தறிவு என்பதாக ஒன்றிருக்கிறது என்று கூடத் தெரியாத காலம் — தெரிந்துகொள்ள முடியாதபடி நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த காலம். இன்று, அப்படிப்பட்ட அறியாமை சூழ்ந்த நிலையன்று மக்களுக்கிருப்பது. ஒவ்வொன்றையும், அவை எவையாய் இருப்பினும், கடவுள்—மதம்—புராணம் இன்னும் வேறெதுவாய் இருப்பினும், அவற்றைநன்காராய்ந்து, அவற்றால் தமக்கும் பிறர்க்கும் நன்மையுண்டாகுமா என்று உணர்ந்த பின்னரே, அவற்றைக் கடைப்பிடித்தல்வேண்டும் என்ற 'உரிமை' மக்களுக்குஉண்டு என்று முடிவு கட்டப்பட்டகாலம். என்றாலும், இன்றும்—இனியும்—என்றும், அந்த இருள்சூழ்ந்த அறியாமை நிலையே மக்களிடம் நிலைத்திருக்கவேண்டும்—அப்படி இருந்தாலன்றித், தங்கள்பிழைப்பு ஒழுங்காக நடவாது என்று கருதுபவர்கள்தான் இன்றும், மக்களின் பகுத்தறிவுக்குமதவேலியிட்டுமறைத்து வைத்திருக்கின்றனர் — கடவுள் பெயரால் காப்புச் செய்திருக்கின்றனர்—புராணத்தைக் காட்டிப் பூட்டி வைத்திருக்கின்றனர். என்றாலும், இத்தடைகளை எல்லாம், உரிமை என்னும் திறவுகோலால் தவிடுபொடியாகச் செய்து, பகுத்தறிவைப் பயன்படுத்தும்பண்பைப் பெற்ற ஒருசிலராவது இன்றிருப்பதனால் தான், நாம் இத்தகைய புராண நிகழ்ச்சிகளை ஆராயவும் அவற்றிலுள்ள பொய் மெய்களை மக்களுக்கு எடுத்துக் கூறவும் முடிகிறது.

இனிச், சேக்கிழாரால் குறிப்பிட்டுப் பேசப்படும் சமண மக்களின் இயல்பைக் காய்தல் உவத்தல் இன்றி நடுநின்று நோக்குவோர், சமணர்களைப்பற்றிச் சேக்கிழார் கூறியிருப்பதைஒருபோதும் உண்மையென ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சம்பந்தரைக் கண்டதும், சமணர்கள், 'குரைத்தார்கள்'—'பிதற்றினார்கள்'—வடவாக்கினிபோல் சீறினார்கள்'–'வெகுண்டார்கள்' என்று கூறப்பட்டிருக்கும் வசைச் சொற்களைச் சேக்கிழார் தாராளமாக அள்ளி வீசியிருக்கிறார். ஆனால், இவை சமணர்களைச் சாருமா? இவ்வாறு அவர்கள் நடந்துகொண்டனரா? நடந்துகொள்ளும் இயல்புடையவர்களா? என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தால், சேக்கிழார், வேண்டுமென்றே, இச்சொற்களைப் பயன்படுத்திச், சமணர்களிடம் மற்றவர்கள் வெறுப்புக் கொள்ளும்படி செய்வதற்காகவே அச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது விளங்கும்.

இவ்வுண்மைக்குச் சான்றாக, மக்களின் பழக்க வழக்கங்கள் எப்படி எப்படி இருக்கவேண்டுமென்பதற்குச் சமணப் பெருமக்கள் வகுத்துத் தந்த நல்லுரைகள் பலவற்றுள் சிலவற்றை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுகின்றேன். அதன் பின்னராவது சேக்கிழாரின் கூற்று உண்மையாக இருக்குமா என்பதனை உணர்ந்து பார்க்க வேண்டுகிறேன்;

“...............மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் [அஃதறிவோர்
காயும் கதமின்மை நன்று”

அதாவது ஈயானது ஒருவனை மிதித்தேறி அவன் தலைமேல் உட்காருவதைத் தெரிந்து சிந்தித்து அதன் உண்மையை அறியக்கூடிய நல்லவர்கள், எரிந்து விழும் சினம் இல்லாதவர்களாய் இருப்பது நல்லது என்பது இதன் பொருள். இந்த ஒழுக்க முறையைக் கூறியவர்கள் யார்? சேக்கிழார் மரபினரான சைவர்களா? இல்லை. சேக்கிழாரால், “குரைத்தார்கள்” என்று கூறப்பட்ட சமணப்பெருமக்கள் தாம் இந்த ஒழுக்க முறையினை உலகுக்கு உரைத்தவர்கள். இப்படிப்பட்ட சிறந்த ஒழுக்க மேம்பாட்டினை நமக்கெல்லாம் வழங்கி நம்மை நல்வழியிற் செலுத்திய சமணப் பெருமக்களைத்தான், சேக்கிழார், ‘குரைத்தார்கள்’ என்று கூசாமல் கூறியிருக்கிறார். குரைப்பது மக்கட் பண்பா? நாய்ப் பண்பா? என்பதனைக் கூடச் சேக்கிழாரால் அறிந்துகொள்ள முடியவில்லைப் போலும்! இனிமேலாவது சேக்கிழார் இல்லாவிட்டால்போகிறது; சேக்கிழார் அன்பர்கள் இருக்கிறார்களே, ‘ அவர்களாவது குரைப்பது நாயேயன்றி மக்களல்லவென்பதை உணர்ந்து, அறிவுத் துறையில் நமக்கு இன்றியமையா உதவி புரிந்த சமணப் பெருமக்களை இத்தகைய இழிசொற்களால் வைதது தவறு—மன்னிக்க முடியாத பெருங்குற்றம் என்பதை உணர வேண்டுகிறேன்.

இனி, ஒருகால், சமணர்கள் தான் இத்தகைய இழிசொற்களைக் கூறினார்கள் என்று வைத்துக் கொண்டாலும், அந்தச் சொற்களைச் சேக்கிழார் தம்முடைய ‘மேன்மை’ பொருந்திய நாவினால் உச்சரித்திருக்கலாமா? கீழ்மக்கள் தாழ்வான சொல்லால் இழிவுபடக் கூறினாலும், மேன்மக்கள் அச்சொல்லைத் திருப்பிக் கூறமாட்டார்கள் என்பது நெறியாக வகுக்கப் பட்டுள்ளது;

“.................................
கீழ்மக்கள் கீழாய சொல்லி [யக்கால்
சொல்பவோ, மேன்மக்கள் [தம்
வாயால் மீட்டு”

அதாவது, தகுதியான சொல் அல்லாமல் கீழ்மக்கள் தாழ்வான சொற்களைச் சொன்னால், மேன்மக்கள் அத்தாழ்வான சொற்களையே தம் வாயினால் திருப்பிச் சொல்வார்களோ! என்பது இதன் பொருள். இங்கு சேக்கிழார், சைவ சமயத்தை மேலான சமயமாகவும், சைவ சமயத்தவரை மேன்மக்களாகவும் வைத்துப் பேசுவதையும், சமண சமயத்தையும் சமணர்களையும் தாழ்வாக வைத்துப் பேசுவதையுமே குறிக்கோளாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடியுள்ளார். தம்மையும் தம் சமயத்தையுமே உயர்வாகவும் மேன்மையாகவும் கருதுபவரும், பிறரும் அவ்வாறே கருதவேண்டுமென்ற பணியைச் செய்தவருமான சேக்கிழாரே, தம்மால் தாழ்வாகக் கருதப்பட்ட சமணர்களைப் பற்றி, “குரைத்தார்கள்” “பிதற்றினார்கள்” ‘சீறிச் சினந்தார்கள்” என்பனபோன்ற தகாத சொற்களைத் தமிழ் மொழிக்கே இழிவை உண்டாக்கும் முறையில்—அடியவர் குழாத்தின் அன்புடைமையை விளக்கவந்த தொண்டர் புராணத்தில் பயன்படுத்திப் பாடியுள்ளார் என்றால், யார் உண்மையாகவே தாழ்ந்தவர்கள், யாருடைய சமயம் கீழானது என்பது, பெரிய புராண நிகழ்ச்சிகளை நடுநின்று படிப்போர்க்கு நன்கு விளங்கும்.

இனிச், சேக்கிழார், தம்முடைய அறியாமையினாலோ, அன்றிச், சமண சமயத்தில் பற்றுக்கொண்டிருந்த அநபாய சோழன் என்ற மன்னனைச் சைவ சமயத்தில் பற்றுள்ளவனாகச் செய்வதற்காகவோ (அநபாய சோழன் என்ற மன்னனைச் சைவ சமயத்தவனாக்கவே பெரிய புராணம் பாடப்பட்டது) ஒருகால், சமணர்கள்பால் இல்லாத குற்றத்தை ஏற்றி அவர்களையும் அவர்களுடைய சமயத்தையும் குறைவாகப் பேசியிருக்கலாம் என்று வைத்துக் கொண்டாலும், ‘அமைதி’யையே தம்முடைய அணிகலனாகக் கொண்டிருந்தவராகப் பேசப்படும் சம்பந்தராவது சமணர்களைப்பற்றி உயர்வாகப்பேசாவிட்டாலும், இழிவாகவாவது பேசாமல் இருந்தாரா என்று பார்த்தால், அதுவும் இல்லையே! சமணர்களைத் திட்டுவதில், சேக்கிழாரைப் பார்க்கிலும் சம்பந்தர் ஒரு படி மேலேயன்றோ சென்றுள்ளார். வஞ்சகர், குண்டர், தடியர், மடையர், ஈனர், புலையர் என்ற இன்னபிற இழிசொற்கள் எத்தனையுண்டோ அத்தனை சொற்களையும் ஒன்று விடாமல்' தம்முடைய தேவாரத்துள் நுழைத்துப் பாடிவிட்டார். கல்வியறிவும், நாகரிகமும், ஒழுக்கமும் இல்லாத ஒருவன் கூடத் தன்னால் தாங்கமுடியாத சினம் வந்த காலத்திலும் கூற அஞ்சும் கொடிய சுடு சொற்களைப் பயன்படுத்துவதில், கல்வியறிவு முதல் ஆண்டவன் அருள் வரை எல்லாம் ஒருங்கே பெற்றுத் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராகப் பேசப்படும் சம்பந்தர் போன்றார் தங்கு தடையின்றித் தாராளமாக நடந்துகொண்டார்கள் என்றால், அவர்களைப்பற்றிப் புராணங்களில் கூறப்பட்டிருப்பதற்கும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கும் யாதாயினும் ஒருமைப்பாடு இருக்கமுடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

இனிச் சமணர்களைப் பற்றிச் சேக்கிழாரும் சம்பந்தரும் கூறியிருப்பவை அனைத்தும் பொய்யேயன்றி ஒரு சிறிதும் மெய்யல்லவென்று நாம் கூறுவதில் ஐயம் கொண்டோர், சைவ சமய நூல்களில், பெரிய புராணம் தேவாரம் ஆகிய இரண்டையும், சமண சமய நூல்களில் சீவகசிந்தாமணி நாலடியார் ஆகிய இரண்டையும் எடுத்து வைத்துக்கொண்டு, அந்த நூல்களில் கூறப்படும் நிகழ்ச்சிகளையும் அமைப்பு முறையையும் தனித்தனி படித்துப் பொருளுணர்ந்து நடு

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai, M. A., at "DravidaNadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.